# யூலை – 16 – திங்கள்

## தூய கார்மேல் மலை அன்னை

## நன்றிப்பலி செலுத்துவோர் என்னை மேன்மைப்படுத்துவர். திபா. 50:23

**முதல் வாசகம் : ஏசாயா1 : 10– 17**

ஆண்டவர் கூறுவது“எருசலேமே, உன்னை ஆளுகிறவர்களும் உன்மக்களும், சோதோம் கொமோராவைப் போன்றவர்களா யிருக்கின்றனர் நம் ஆண்டவரின் அறிவுரையைக் கேளுங்கள் அவர்தம் கட்டளைக்குச் செவிசாயுங்கள்.”எண்ணற்ற உங்கள் பலிகள் எனக்கு எதற்கு?” என்கிறார் ஆண்டவர். ஆட்டுக் கிடாய்களின் எரிபலிகளும், கொழுத்த விலங்குகளின் கொழுப்பும் எனக்குப் போதுமென்றாகிவிட்டன் காளைகள், ஆட்டுக் குட்டிகள், வெள்ளாட்டுக் கிடாய்கள் இவற்றின் இரத்தத்திலும் எனக்கு நாட்டமில்லை. நீங்கள் என்னை வழிபட என்திருமுன் வரும்போது, இவற்றையெல்லாம் கொண்டுவந்து என்கோவில் முற்றத்தை மிதிக்க வேண்டுமென்று கேட்டதுயார்? இனி, காணிக்கைகளை வீணாகக் கொண்டுவரவேண்டாம் நீங்கள் காட்டும் தூபம் எனக்கு அருவருப்பையே தருகின்றது. நீங்கள் ஒழுங்கீனமாகக் கொண்டாடும் அமாவாசை, ஓய்வுநாள் வழிபாட்டுக் கூட்டங்களை நான்சகிக்கமாட்டேன்.உங்கள் அமாவாசை, திருவிழாக் கூட்டங்களையும், என் உள்ளம் வெறுக்கின்றது. அவை என்மேல் விழுந்த சுமையாயின் அவற்றைச் சுமந்து சோர்ந்துபோனேன். என்னைநோக்கி உங்கள் கைகளை நீங்கள் உயர்த்தும்போது, பாராமுகத்தினனாய் நான் இருப்பேன் நீங்கள் தொடர்ந்து மன்றாடினாலும் நான் செவிகொடுப்பதில்லை. உங்கள் கைகளோ இரத்தக் கறையால் நிறைந்திருக்கின்றன.உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள் உங்கள் தீச்செயலை என்திருமுன்னிருந்து அகற்றுங்கள் தீமைசெய்தலை விட்டொழியுங்கள். நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள் நீதியை நாடித்தேடுங்கள் ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள். திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள் கைம்பெண்ணுக்காக வழக்காடுங்கள்” என்றார்.

**பதில்பாடல் :** தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுள் தரும் மீட்பைக் கண்டடைவர்.

**நற்செய்தி : மத்தேயு 10 : 34 --- 11 : 1**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக்கூறியது : ”நான் உலகிற்கு அமைதி கொணரவந்தேன் என எண்ணவேண்டாம். அமைதியை அல்ல, வாளையே கொணரவந்தேன்.தந்தைக்கு எதிராக மகனையும். தாய்க்கு எதிராக மகளையும். மாமியாருக்கு எதிராக மருமகளையும் நான் பிரிக்கவந்தேன்.ஒருவருடைய பகைவர் அவரது வீட்டில் உள்ளவரே ஆவர்.என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்புகொண்டுள்ளோர் என்னுடையோர் எனக்கருதப்படத்தகுதியற்றோர். என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக்கருதப்படத்தகுதியற்றோர்.தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்.தம் உயிரைக் காக்கவிரும்புவோர் அதை இழந்து விடுவர். என்பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக்கொள்வர்.”உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவரோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார். இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறுபெறுவார். நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறு பெறுவார். இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என்சீடர் என்பதால் ஒருகிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம்கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து முடித்ததும் பக்கத்து ஊர்களில் கற்பிக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியின் மூலம் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அவரது சீடர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். வரலாற்றினை உற்று நோக்கும் போது சீடத்துவம் என்பதனை ஒரே கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ளப்படவில்லை.என்பதை நாம் உணர முடியும். முதல் நான்கு நூற்றாண்டுகளில் உரோமை மதம் அரச மதமாகவும் ,கிறிஸ்தவம் கிளர்ச்சி நெறியாகவும் கருதப்பட்ட வேளையில் சீடத்துவம் என்பது கிறிஸ்துவுக்காக மரித்தல் என்ற அர்த்தம் கொண்டதாய் இருந்தது. ஆனால் கொன்ஸ்டைன் என்ற பேரசன் கிறிஸ்துவத்தை அரச மதமாக்கிய பின் கிறிஸ்துவுக்காக மரிப்பது அவசியமானதாகி விட்டது. இப்படிப்பட்ட சூழ் நிலையில் காட்டுக்குத்தனியே சென்று புலன்களை அடக்கி வாழ்வதே சீடத்துவத்தின் அளவு கோலாக கருதப்பட்டது. இந்த சூழ்நிலையில் தான் துறவற மடங்கள் தோன்றின. இன்னும் சில நூற்றாண்டுகள் கழித்து கிறிஸ்தவ சடங்காச்சார வழிபாடுகளில் மூழ்கி இருந்த திருச்சபையின் சட்ட திட்டங்களை இம்மி பிசகாமல் கடைபிடிப்பதே சீடத்துவ வாழ்வு நெறியாக கருதப்பட்டது. இதை எதிர்த்தே மார்ட்டின் லூர்த்தர் போன்றோர் கிள்ர்ச்சி செயதனர். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் சமூக மதிப்பீடுகளும், மனிதமனங்களும் சிதைக்கப்படும் வேளையில் சீடத்துவம் என்பது ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மக்களுக்காக உழைப்பதிலும் நீதியின் சார்பாக நிலைப்பாடு எடுப்பதிலும் அடங்கியிருக்கிறது, என்ற புரிதல் ஏற்பட்டு வருகின்றது. இப்படியான நிலைப்பாடு எடுக்கின்ற போது சொந்த குடும்பத்திலும், கூட பிரிவினைகள் வரக்கூடும் என்பதே இன்றைய நற்செய்தியின் சாராம்சம். எனவே தனிப்பட் வாழ்க்கையில் நல்லவராக இருப்பதோடு சமூகத்தின்மீது அக்கறை கொண்டவராகவும் வாழ்வதற்கான அழைப்பே இன்றைய நற்செய்தி நமக்கு தந்து வாழ அழைக்கின்றது